**சீனா அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட்ட முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் III - (கட்டம் I) - 2018**

சீனா அபிவிருத்தி வங்கி நிதியளிக்கப்பட்ட முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் III - (கட்டம் I) இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் சீனா அபிவிருத்தி வங்கி (சீடிபீ) கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 மார்ச் 11 ஆம் திகதிய 4510201401100000245 ஆம் இலக்க கடன் உடன் படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போதைய நெடுஞ்சாலைகள் முன்னால் உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. நாட்டின் பல்வேறு பக்கங்களிலுமிருந்தும் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட வீதிப்பிரிவுகளின் புனரமைப்பினூடாக நாட்டின் தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பின் இயக்கத்தினை விருத்தி செய்து அதனூடக பொருளாதார அபிவிருத்திக்கு வழிவகுத்தல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 46,184.54 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 357.69 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 38,736 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 300 மில்லியன் அபிவிருத்திக்கான சீனா அபிவிருத்தி வங்கியினால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 செப்தம்பர் 09 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 ஜுன் 17 இல் பூர்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2019 பெப்ரவரி 19 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு

முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| உரிய நேரத்தில் அரசினால் கையளிக்கப்பட்டிராத கண்டி – யாழ்ப்பாண வீதி வேலைகள் தளத்திற்காக ஒப்பந்ததாரர் ரூபா 119 மில்லியன் இழப்பீடொன்றினை பெற்றிருந்தார். இருப்பினும் அத்தொகையில் ரூபா 94 மில்லியன் பிணக்குகள் இணக்க சபையினால் செலுத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது ஆனால் அவ் இழப்பீட்டிற்காக நிதிக்கூற்றுக்களில் எவ்வித ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் குறைமதிப்பீடு. | டிஎபீ இன் தீர்மானம் தரப்பினர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் இருந்ததுடன் தீர்ப்பு வழங்கப்படும் வரை, செலுத்தவேண்டிய தொகையினை தீர்மானிக்க முடியாது. எனவே, அவ் இழப்பீட்டு தொகையினை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க முடியாமலுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல. 08 இன் பிரகாரம் ஒதுக்கங்கள் செய்யப்படல் வேண்டும். |

### 2.2 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| 05/2016 ஆம் இலக்க பொது நிதிச்சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமானம் இல.756. | இருப்புக்களின் மதிப்பீடு செய்யப்பட்டிராததுடன் மதிப்பீட்டு அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அளிக்கப்பட்டிருக்கவுமில்லை. | பலவீனமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை. | இதன் பின்னர் 2016 மார்ச் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கையின்படி இருப்பு மதிப்பீடு செய்யப்படும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படல் வேண்டும். |

## 3. பௌதீக முன்னேற்றம்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| மாறல் கட்டளையுடனான 248.34 கி.மீ விஸ்தரிப்பிலுள்ள 12 வீதிகள் மற்றும் 16 கி.மீ விஸ்தரிப்பிலுள்ள ஏனைய 04 வீதிகள் என்பவற்றின் புனரமைப்பு வேலைகள் 2019 செப்தம்பர் 30 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அதேநேரம் மாறல் கட்டளையினூடான 22.65 கி.மீ விஸ்தரிப்பிலுள்ள 05 வீதிகளின் நிர்மானம் 2019 திசெம்பர் 31 வரை நிர்மானிக்கப்பட்டுக்கொண்டிருந்தது. | செயற்திட்டத்தினால் தேவையற்ற செலவுகள் ஏற்படும் சாத்தியம். | கருத்துரைக்கவில்லை. | வீதிகளின் வேலைகளின் மிகுதி புனர் நிர்மானத்தினை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | அமைச்சின் பெறுகை குழுவிடமிருந்து உரிய அனுமதி பெறப்படாமல், செயற்திட்டத்தின் வேலைப்பரப்பிற்கு வெளியே செய்யப்பட்ட செயற்திட்ட வேலைகளின் கண்டி கிரிமட்டிய வீதியின் நிர்மான நடவடிக்கைகள் 2014 இல் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 11.32 மில்லியன் கொடுப்பனவு 2016 ஜூலை 18 இல் செய்யப்பட்டிருந்தது. | நிதிகளினை முறைகேடாக பயன்படுத்தும் சாத்தியம். | பெறுகை கைநூலின் பிற்சேர்ப்பு 14 இன் பிரகாரமும் எப்ஐடிஐசீ (FIDIC) ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரமும், செயற்திட்ட பணிப்பாளர் அப்பெறுமதியினை அனுமதிக்கும் அதிகாரத்தினை கொண்டிருப்பினும், பணிப்பாளர் நாயகம் அத்தொகையினை அனுமதித்திருந்தார். மேலும் இதற்கு அமைச்சின் பெறுகை குழுவிடமிருந்து அனுமதியினை பெறவேண்டிய தேவைப்பாடு இல்லை. | உரிய அனுமதிகளினைப் பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்த நிபந்தனையின் பிரகாரம் செயலாற்றல் உத்தரவாதப்பத்திரத்தினை ஒப்பந்ததாரர் அவரது சொந்த செலவில் பெற வேண்டியிருந்தும், அதனை ஒரு தனியான கொடுப்பனவு உருப்படியாக பீஒகியுவ் (BOQ) வில் | ஒப்பந்ததாரர்களிற்கு தகாத நன்மைகள். | இல்லையெனில், ஒப்பந்ததாரர் செயலாற்றல் உத்தரவாதப்பத்திர கிரயத்தினை ஏனைய கொடுப்பனவு உருப்படிகளில் சேர்த்தால் விகித அதிகரிப்பில் பாதிப்பினை ஏற்படுத்தும். எனவே, கொடுப்பனவு உருப்படி 108.1(1) உடனான பிஒகியுவ் | மேலதிக கொடுப்பனவுகளை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ளடக்குவதனூடாக, மரவில்லை உடுபட்டவ வீதியின் ஒப்பந்ததாரர் ரூபா 31 மில்லியன் தொகையான தாகாத நன்மைக்கு உரித்துடையவராகவிருந்தார். | | (BOQ) வில் காணப்படும் ஏற்பாடுகளின் கீழான கொடுப்பனவுகள் ஓர் புறநடையான கொடுப்பனவுகள் அல்ல. | |
| (இ) | வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மாவனல்ல – கேம்மத்தகம – கம்பள வீதியின் 23+850 தொடக்கம் 23+855 வரையான பிரிவின் நிலக்கீழ் மேற்பரப்பில் (காபட்) குறைபாட்டிற்கான அறிவுறுத்தல் 2019 செப்தம்பர் 05 இல் வழங்கப்பட்டிருந்தும், 2019 நவம்பர் 25 வரை கூட எவ்வித சரிசெய்தல் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதி நிர்மானத்தின் ஆயுளினை நேரடியாக தாக்கும். | கடந்த சில மாதங்களில் காணப்பட்ட பலத்த மழை காலநிலைமை காரணமாக, திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை . ஒப்பந்ததாரர் 2020 சனவரி ஆரம்பத்தில் திருத்த வேலைகளை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்துள்ளனர். | சரியான அளவீடுகள் அவதானிக்கப்பட வேண்டியதுடன் எவ்வித தாமதமுமின்றி பிழைகள் திருத்தப்படல் வேண்டும். |